# துப்பறிவாளர்கள் - கைவேலைகள்

## கடுகளவு விசுவாசம் - காந்தம்

தேவையான பொருட்கள்:
• பிரவுன் தாள் அல்லது வெல்வட் தாள் அடிமரத்திற்கு (ஒன்று ஒரு பிள்ளைக்கு)
• வேதாம வசனம் மத்தேயு 17:20 எழுதிய தாள் (ஒன்று ஒரு பிள்ளைக்கு)
• மரம் போன்ற வடிவத்தை பச்சை தாள் அல்லது வெல்வட் தாளிலிருந்து வெட்டவும் (ஒன்று ஒரு பிள்ளைக்கு)
• மரத்தை வெட்டிய அதே தாளிலிருந்து பச்சை இலைகள் (மூன்று ஒரு பிள்ளைக்கு)
• சிறிய விதை (ஒன்று ஒரு பிள்ளைக்கு)
• பசை காந்தத் துண்டு அல்லது காந்த டேப்



பச்சை மரம் மற்றும் இலைகளின் மாதிரி

செயல்முறை :
1. பச்சை மரத்தின் மூலையில் வேதாகம வசனத்தை பசையினால் ஒட்டவும்.
2. படத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் பிரவுன் அடிமரத்தை பச்சை மரத்துடன் பசையினால் ஒட்டவும்.
3. பச்சை இலைகளை மரத்தில் ஒட்டவும்.
4. கடைசியில் காந்தத்தை மரத்தின்பின் ஒட்டவும். மாணவர்கள் தங்களை பெயர்களை கைவேலையில் எழுத நியாபகப்படுத்துங்கள்.






அடி மரம் மாதிரி.

# காணாமற்போன ஆடு

தேவையான பொருட்கள்
• வெள்ளை தாளில் ஆட்டின் தலை, காதுகள் மாதிரி மற்றும் கழுத்துப் பட்டை மாதிரி (ஒன்று ஒரு பிள்ளைக்கு)
• கிரேயான்
• கருப்பு தாளில் செய்யப்பட்ட கண்கள், வாய் மற்றும் மூக்கு
• சிறிதளவான பாப்கார்ன் (25 பாப்கார்ன் ஒரு மாணவருக்கு)
• பசை

செயல்முறை:
1. கழுத்துப் பட்டையில் மத்தேயு 18:14 வசனம் எழுதி வர்ணம் தீட்டவும்.
2. பின்பு ஆட்டின் தலை மற்றும் காதுகளுக்கு வர்ணம் தீட்டவும். மாணவர்கள் தங்கள் பெயர்களை கைவேலையில் எழுத நியாபகப்படுத்துங்கள்.
3. ஆட்டின் மீது கழுத்துப் பட்டை, காதுகள், கண்கள், மூக்கு மற்றும் வாய் ஒட்டவும்.
4. ஆட்டின் மயிர் இருக்க வேண்டிய இடத்தில் சிறிதளவு பசை ஒட்டி பாப்கார்ன் ஒட்டவும்.




ஆட்டின் மாதிரி



# விலையுயர்ந்த முத்து



தேவையான பொருட்கள்
• சிப்பி செய்ய ஒரு பேப்பர் தட்டு (ஒன்று ஒரு மாணவருக்கு)
• வலது பக்கத்தில் உள்ள மாதிரியை பெரிதாக்கி நகல் எடுக்கவும்
• சிறிய பஞ்சு பந்து (ஒன்று ஒரு மாணவருக்கு)
• கிரேயான், கலர் பென்சில் அல்லது வண்ணம்
• வேதாகம வசனம் எழுதிய தாள் அல்லது வசனம் எழுதத் தாள்.
• பசை

செயல்முறை:
1. சிப்பியின் இரண்டு பக்கமும் வர்ணம் பூசவும். மாணவர்கள் தங்கள் பெயர்களை கைவேலையில் எழுத நியாபகப்படுத்தங்கள்.
2. வர்ணம் பூசிய பின், புள்ளியிட்ட கோட்டின் உதவியோடு சிப்பியின் மாதிரியை மூடப்பட்ட புத்தகம் போல மடக்கவும். முன்னால் இருக்கும் விளிம்புகளை சுருட்டி விடவும்.
3. பஞ்சு பந்தை உள்ளே வைத்து ஒட்டவும். அது முத்து போன்று இருக்கும்.
4. சிப்பியின் உள்ளே வேதாகம வசனத்தை ஒரு தாளில் எழுதி ஒட்டவும்.



சிப்பியின் மாதிரியை பெரிதாக்கி நகல் எடுக்கவும்.



சிப்பி செய்ய புள்ளிட்ட கோடுகள்.